மே - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 7

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




20-04-2013ல் கல்லூரியில் நடந்த முப்பெரும் விழாவில்
இருபெரும் செயலர்கள், காவல்துறை துணை ஆணையாளர்
திரு. திருநாவுக்கரசு அவர்களும் மற்றும் முதல்வர்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 7 திருவள்ளுவர் ஆண்டு 2044

மே 2013





| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் – மொழிபெயர்ப்பும் சிக்கலும் | முனைவர் ச. கவிதா | 4 |
| உடம்படுமெய்கள் – உடம்படா வாதங்களில் சில திருத்தம் | தமிழாகரர் தெ. முருகசாமி | 9 |
| இலக்கியம் காட்டும் விலங்குகள் | புலவர் சி. பாண்டுரங்கன் | 13 |
| திருக்குறளில் ஓசை | ஆறுவிரல் ஐம்பொறி | 24 |
| அறுபத்து நான்கு கலைகள் | திருமதி. இராசம் மரகதம் | 27 |
| வாழ்வியல் மரபுகள் – அக மரபு | முனைவர் பா. திருஞானசம்பந்தம் | 30 |
| வள்ளுவத்தை ஏற்போம் ! | புலவர் ந. ஞானசேகரன் | 35 |
| யார் டாக்டர் மு.வ.? | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 36 |
| இல்லாதது இல்லை... | முனைவர் மலையமான் | 39 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம்!

மே மாதத்திற்கான செந்தமிழ் இதழினை பெரும் பேரறிஞர்களின் கட்டுரைகளோடும், சிறந்த மரபுக் கவிதைகளோடும் வெளியிடுவதில் பெருமையடைகின்றோம்.

"முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்" எனத் தொடங்கும் சங்க இலக்கிய பாடலை மொழி பெயர்க்கும் போது ஏற்படும் சிரமங்களை முனைவர் கவிதா அவர்கள் முதல் கட்டுரையில் தந்து சிறந்த கட்டுரையாளர் என்பதில் முதலிடம் பிடித்துப் பாராட்டுப் பெறுகிறார்.

தமிழறிஞர் தே. முருகசாமி அவர்கள் "உடம்படு மெய்கள் – உடம்படா வாதங்கள் " எனும் ஆய்வுத் தேடலை தொடர்ந்து தந்து, மு. ராகவையங்கார் காலத்து "செந்தமிழ்" சிறப்பினை நினைவுபடுத்தி தமிழ் புலவர்களின் நெஞ்சில் நிலைத்த இடம் பிடித்துக் கொண்டு வருகிறார்.

புலவர் சி. பாண்டுரங்கன் அவர்களின் "இலக்கியம் காட்டும் விலங்குகள்" – எனும் ஆய்வுக் கட்டுரை சங்க இலக்கியச் சான்றுப் பட்டியல்களோடு இம்மாத இதழிலும் இடம்பெற்றுள்ளது. "யானையும் வரையாடும்" தமிழர் தம் வாழ்வில் பெற்ற இடம் அறிய உதவியிருக்கிறார்.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் "திருக்குறள் ஓசையும், திருமதி இராசமரகதம் அவர்களின் "அறுபத்தி நான்கு கலைகளும்" "வாழ்வியல் மரபுகள் " பற்றிய முனைவர் பா. திருஞானசம்பந்தம் அவர்களுடைய கட்டுரையோடு இடம்பெற்று இம்மாத இதழுக்கு மெருகூட்டியுள்ளன.

டாக்டர் மு.வ. யார்? என்ற வினாவை எழுப்பி, இவர்தான் மு.வ. என இனம் காட்டியிருக்கும் கவி வேந்தர் வேழவேந்தனுடைய இலக்கிய நடை போற்றுதலுக்குரியது.

தகுந்த வாசகர் வாசகங்களோடு தொடுக்கப்பட்டிருக்கும் இம்மாத இதழ் மாலையைத் தங்களுக்குச் சூடுவதில் மகிழ்ச்சியடையும் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் – மொழிபெயர்ப்பும் சிக்கலும்

முனைவர் ச. கவிதா
கோவை

சங்க அகப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு கூற்று நாடகங்கள். ஒருவரது கூற்றாக அமையும்; யாரிடம் எச்சூழலில் கூறப்பட்டது என்பது பாடலால் உய்த்துணரப்படும். குடும்பம், கற்புடை மகளிரின் கடமைகள், பெண்கள் குடும்பத்தைப் பேணும் திறம் ஆகியவை அகப்பாடல்களில் மிக அழகாக, எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களின் அழகைத் தமிழில் முழுமையாக உயர்த்துணர்ந்து எண்ணி எண்ணி இன்புறும் அதே வேளையில் பிற மொழிகளில் இதன் முழுமையை, அழகை ஒரு கூற்று நாடகமாகக் கொண்டு செல்ல இயலுமா என்பது ஐயமாகும்.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிது எனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"**

எனும் குறுந்தொகைப் பாடல் (167) இனியதொரு இல்வாழ்க்கை ஓவியம். தலைவனும் தலைவியும் மணம்புரிந்து கொண்டு இல்லறம் நடத்தும் மனையில் தலைவி, தலைவன் இனிதெனக் கூறும்படியாக முளிதயிர் பிசைந்து, குய்ப்புகை கழும, தீம்புளிப் பாகு செய்து உண்பிக்கின்ற திறம் அழகாக வர்ணிக்கப்படுகிறது.

இப்பாடலை எம். சண்முகம் பிள்ளை மற்றும் டேவிட் லூடன் – KURUNTOKAI - An Anthology of Classical Tamil Poetry, எம்.எல். தங்கப்பா – HUES AND HARMONIES FROM AN ANCIENT LAND எனும் நூல்களில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். மூலமொழிப் பாடலைப் படிக்கும் பொழுது பெறும் உணர்வுகளுக்கு இணையான உணர்வுகளை இம்மொழிபெயர்ப்புப் பாடல்களில் பெற இயலுமா என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது.

தலைவி நுண்ணிதின் மகிழ்ந்த தன்மையை யார், யாரிடம், எத்தகைய சூழலில் கூறியது என்பது மூலமொழிப் பாடல் வரிகளில் காணப்படாத நிலையில் உ.வே. சாமிநாதையர் போன்ற உரையாசிரியர்களை அடியொற்றி; WHAT HER FOSTER - MOTHER SAID (When she returned from visiting the couple after their marriage) - M. Shanmugam Pillai & David Ludden. A DOMESTIC SCENE - M.L. Thangappa எனப் பாடல்களுக்குத் தலைப்பிடுகின்றனர்.

## முளிதயிர்

முளிதல் – காய்தல்; நன்றாகக் காய்ந்த பாலால் உண்டாகிய தயிர் – முளிதயிர், பாறைபடுதயிர் (சீவக. 426) என இதற்குச் சான்று காட்டுகின்றார் உ.வே. சாமிநாதையர் அவர்கள். முளிதல் என்பது தயிரின் முற்றிய சுவை, கெட்டித்தன்மை இவற்றை விளக்குவதாக அமைந்தது. ஆனால் 'முளிதல்' என்பதற்கு இணையான நிகரனைக் காண்பதில் ஏற்படும் சிக்கல் கருதி 'thick curds' என மொழிபெயர்க்கின்றனர் எம். சண்முகம் பிள்ளை மற்றும் டேவிட் லூடன். எம்.எல். தங்கப்பா அவர்கள் நிகரென காணும் சிக்கலுக்குள் தன்னை நுழைத்துக்கொள்ளாது 'Some Curds' என மட்டுமே மொழி பெயர்க்கின்றார். முற்றிய தயிரைப பிசைந்து, தானே துழாவிச் சமைத்துத் தாளிதம் செய்த தீம்புளிப்பாகர். புளிப்புச் சுவை மிக்கு இருந்திடாது, அளவான இனிய புளிப்புத் தன்மை உடையதாலேயே 'தீம்புளிப்பாகு' எனப்பட்டது. ஆனால் புளியம்பழத்தினின்று பெறப்பட்ட பாகு அன்று இது. இதனை எம். சண்முகம் பிள்ளை மற்றும் லூடன் 'tasty tamarind sauce' என மொழிபெயர்க்கின்றனர். எம்.எல். தங்கப்பா இதனை 'To prepare the sour broth' என ஓரளவிற்கு இணையாக மொழிபெயர்க்கின்றார். இதில் 'இனிய' (தீம்புளி) என்பதற்கு இணையான நிகரன் காணப்படவில்லை.

## காந்தள், மெல்விரல்

பாடலில் காணப்படும் காந்தள் மெல்விரல் என்பதனை மொழிபெயர்ப்பாளர்கள்;

'her kanthal fingers' – எம்.எல். தங்கப்பா

'her tender fingers like kantal flowers'

– எம். சண்முகம் பிள்ளை மற்றும் டேவிட் லூடன் மொழி பெயர்க்கின்றனர். சங்கப் பாடல்களில் நிறம், மென்மைத் தன்மை, வடிவம் இவற்றால் காந்தள் மலர் பெண்ணின் விரல்களுக்கு உவமையாகக்

கூறப்படுகின்றது. மூலமொழி வாசகர் இதனை உரையாசிரியரின் துணை கொண்டு அறியும் நிலையில் பெறுமொழி வாசகர் மொழிபெயர்க்கப்பட்ட பாடலை மட்டும் கொண்டு காந்தள் மலரின் தன்மையை, உவமையின் சுவையை முழுமையாக உணர இயலாது. இளமைத் தன்மை பொருந்திய விரல் என்பதை மட்டும் உணர்த்தும் பொருட்டு 'tender' என்ற சொல்லினைக் கையாள்கின்றனர் எம். சண்முகம் பிள்ளை மற்றும் லூடன். ஆனால் எம்.எல். தங்கப்பா காந்தள் விரல் என மட்டுமே குறிப்பிடுகின்றார். 23 வரிகளில் மூலமொழிப் பாடலில் இல்லாத செய்திகளையெல்லாம் விளக்கமாக ஒரு குறு நாடகத்தைப் போன்று எடுத்துக்கூறும் தங்கப்பா காந்தள் மெல்விரலையும் விளக்கியிருக்கலாம்.

## குவளை உண்கண்

குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்கள் என்பது பொருளாகும்.

'Her eyes like kuvalai flowers'

- எம். சண்முகம் பிள்ளை மற்றும் லூடன்

'Her soft eyes' - எம்.எல். தங்கப்பா

எனக் குவளை உண்கண் எனும் தொடரினை மொழி பெயர்க்கின்றனர். மையுண்ட எனும் அடைமொழி தலைவியின் அழகிய மற்றும் இளம் கண்களுக்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக அமைந்தது. ஆனால் மொழிபெயர்ப்பில் உண்கண் மொழி பெயர்க்கப்படவில்லை. குவளைக் கண்களும், மெல்லிய கண்களுமே பெறப்படுகின்றன. மூலமொழிப் பாடலை முழுவதுமாக உள்வாங்கி பெறுமொழியாளருக்குத் தம் நடையில் வழங்கும் மொழிபெயர்ப்பாளர் மிகையான வர்ணனைகளுக்கும் மேலாக, இருப்பதை விடுத்து மொழி பெயர்ப்பது என்பது மூலமொழி சார்ந்த கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கங்களை, அழகியலை எடுத்துச் செல்லுமா என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது.

## குய்ப்புகை

தலைவி தீம்புளிப்பாகு தாளிக்கும் பொழுது எழும் புகை குய்ப்புகை எனப்படுகின்றது; குய் என எழும் புகை எனக் குறிப்பிடுகின்றார் தமிழண்ணல். குய்ப்புகை கமழ எனும் தொடரை எம். சண்முகம் பிள்ளை மற்றும் லூடன்;

"became filled with smoke, from the seasoning"

என இணையாக மொழிபெயர்க்கின்றனர். எம்.எல். தங்கப்பா - "eyes filled with smoke" என மொழிபெயர்க்கின்றார். இதில் புகை மட்டுமே காணப்படுகின்றது.

## ஒள் நுதல் முகன்

ஒளி பொருந்திய நெற்றியை உடைய தலைவியினது முகம் எம். சண்முகம் பிள்ளை மற்றும் லூடனின் மொழிபெயர்ப்பில் "the face of the girl with a bright forehead" எனக் காணப்படுகின்றது. எம்.எல். தங்கப்பாவின் மொழிபெயர்ப்பில் 'ஒள் நுதல் முகன்' காணப்பெறவில்லை.

## நுண்ணிதின் மகிழ்ந்தன்று

தான் உழந்து தாளிதம் செய்த பாகு சுமாராக இருந்தாலும் தன்னை மகிழ்விப்பதற்காக இனிதாக இருக்கிறது எனச் சொல்லிக் கொண்டு உண்ணும் கணவனின் அன்பு தலைவியின் மனத்தில் மகிழ்ச்சியை விளைவிப்பதால் தலைவியின் முகமானது தலைவன் மட்டுமே உணரக்கூடிய வகையில் மிக நுட்பமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது. 'Perseptible' என்பது புலனாகும் தன்மையைக் குறிப்பிடுவது 'Imperseptible' என்பது புலனாகாத நிலையைக் குறிப்பது. தலைவியினது மகிழ்ச்சி சார்ந்திருப்பவர்கள் மட்டுமே உணரக் கூடிய நுண்ணிய மகிழ்ச்சியாகும்; புலனாகாத மகிழ்ச்சியன்று. எம்.எல். தங்கப்பா இதனை;

"How relieved she was

And how great, her quiet joy!' என மொழிபெயர்க்கின்றார். இதனை எம். சண்முகம் பிள்ளை மற்றும் லூடன்; 'Smiled almost imperseptibly' என மொழி பெயர்த்திருப்பது ஓரளவிற்கு இணையாக உள்ளது.

## அடிக்குறிப்புக்கள்

மூலமொழிப் பாடலில் உள்ள பொருட்செறிவு மிக்க சொற்களையும் தொடர்களையும் மொழிபெயர்க்கும் பொழுது மிகச் சரியான இணையான நிகரனை இட இயலாத நிலையில் ஓரளவிற்கு இணையான நிகரனை இட முயல்கின்றனர் மொழிபெயர்ப்பாளர்கள். பொருளை உணர்த்துவதற்கு அச்சொற்கள் போதாத நிலையில் அடிக்குறிப்புக்களின் துணை கொண்டு

அவற்றை விளக்குகின்றனர். எம். சண்முகம் பிள்ளை மற்றும் டேவிட் லூடன் தலைவியின் நுண்ணிய மகிழ்ச்சியை முழுவதுமாக உணர்த்த இயலாத நிலையில் பாடலைத் தொடர்ந்து கீழே இடம் பெறும் அடிக்குறிப்பில்;

"She was anxious to see how he likes her
cooking, and was gladdened by his response"

எனக் குறிப்பிடுகின்றனர். 'கடிநகர்ச் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது' என்பது பாடலின் பின்புலமாக உரையாசிரியர்களால் குறிப்பிடப்பட்டாலும் பெறு மொழியில் பாடல் வரிகளிலேயே இதனை வெளிப்படையாக உணர்த்தினால் தான் பாடலின் சுவையைப் பெறு மொழியாளருக்கு முழுமையாகக் கொடுக்க இயலும் என,

"My newly wed daughter
Fumbles with inexperience
In her new home" - எனப் பாடலின் தொடக்கத்திலேயே விளக்குகின்றார் எம்.எல். தங்கப்பா.

எம். சண்முகம் பிள்ளை மற்றும் லூடன் மொழிபெயர்க்கப்பட்ட பாடலைத் தொடர்ந்து அடிக்குறிப்பில்;

'From the description of her cooking. She might be new at it, either because she is so young, or because she had servants at home' என விளக்குகின்றார்.

ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட கல்லூரி, பல்கலை மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம், மொழிநடை, கவிச்சுவை ஆகியவற்றை உணர்த்தும் விதமாக சங்க இலக்கியப் பாடல்களைக் கொண்டு செல்கின்றனர் மொழிபெயர்ப்பாளர்கள். ஆனால் மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களை, நூல்களைப் படிக்கக் கூடிய வாசகர்கள் மாணவர்கள் மட்டுமல்லர், பலதரப்பினரும் ஆவர். எனவே சங்க இலக்கியப் பாடலின் பொருளை செறிவோடு எளிமையாகக் கொண்டு செல்லும் அதே வேளையில் முழுமையாகவும் மூலமொழியாளர் உற்ற உணர்வை, இன்பத்தைப் பெறுமொழியாளரும் பெறும் வகையில் கொண்டு செல்ல வேண்டும். 6 அடிகளில் ஓர் ஓவியம் போன்றமைந்த மூலமொழிப் பாடலின் சுவையினை எம். சண்முகம் பிள்ளை மற்றும் டேவிட் லூடனின் 13 வரிகளில் ஓரளவிற்குப் பெற முடிகின்றது. ஆனால் எம்.எல். தங்கப்பா விளக்க மொழிபெயர்ப்பாக சிறுகதை போன்று ( விடுநிலைப்பா - free verse ) 23 வரிகளில் மொழிபெயர்த்துள்ளார்.

# உடம்படுமெய்கள் – உடம்படா வாதங்களில் சில திருத்தம்

தமிழாகரர் தெ. முருகசாமி
புதுச்சேரி

2013 – செந்தமிழ் பிப்ரவரித் திங்கள் இதழில் புலவர் திரு. சா. பன்னீர்செல்வம் அவர்கள் எழுதிய உடம்படுமெய்கள் – உடம்படா வாதங்கள் பற்றிய கட்டுரையில் சில திருத்தங்களை இக்கட்டுரை வழி நினைவூட்டலானேன்.

கட்டுரையாளர் குறித்த தழீஇக் கோடல் என்புழி ழீ என்பதன் ஈகாரம் அதற்குரிய இரண்டு மாத்திரையினும் கூடுதலாக நீட்டி ஒலிக்கப்படுதலின்றி தழீஇ என இகரங்கள் அடுத்தடுத்து ஒலிக்கப்படுவதில்லை, அவ்வாறொலிப்பார் பொருளறிவாரா? என்பது வினாவாகக் கேட்கப்பட்டுள்ளது.

**நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்** (நூன்மரபு 6)

என்ற நூற்பா எழுத்துக்கள் அளபெடுக்கும் போது மாத்திரை கூடுதலாக உச்சரிக்கப்படுதலைக் கூறினாலும் நீட்டம் வேண்டின் அதாவது நீட்டி ஒலிக்க விரும்பினால் என்றதாலேயே பொருள் உணர்வோடு ஒலிக்க வேண்டிய இன்றியமையாமையின் குறிப்பு (தொனி) நன்கு விளங்குகிறது.

உலகியலில் ஒருவரை ஒருவர் மனக்குமுறலோடு வயிற்றெரிச்சலால் திட்டிக் கொள்ளும் போது நாசமாப் போக, மண்ணாப் போக என்பது எளிதாக அதாவது சாதாரணமாகத் திட்டிக் கொள்ளாமல் மண்ணா என்றதன் ஆகாரத்தை எவ்வளவு நீட்டி ஒலிக்க முடியுமோ அந்த அளவிற்கு நீட்டி ஒலிப்பர். இந்த நீட்டம் கூறுவோரின் குமுறலை வெளிப்படுத்து போலக் கேட்போர்க்கும் கூறுவோரின் பகை உணர்வை அளந்தறியச் செய்யும் என்பதே உண்மையாம்.

இல்லாமை நீட்டி ஒலிப்பதாக மட்டுமின்றி ஓரளவாக நீட்டி ஒலிப்பதான அளபெடை ஒலியிலும் கூடப் பொருள் தொனிப்பு உண்டு என்பதைக் கீழ்க்கண்ட குறளால் மெய்ப்பிக்கலாம்.

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை. (15)**

இதில் கெடுப்பதும் எடுப்பதும் என அளபெடையின்றிக் கூறினாலும் இலக்கணப் பிழையின்றிப் பொருள் உணர்த்தும் போது அளபெடையை வள்ளுவர் இட்டுரைப்பானேன்? எனச் சிந்தித்தால் வேருண்மை புலப்படும். கூடுதலான மழை பெய்தோ அல்லது சிறிது கூடப் பெய்யாமலோ கெடுத்தாலும் கெடுக்கும் என்ற பொருள் – கெடுப்பதும் என்ற சொல்லினும் கெடுப்பதூஉம் என்ற சொல்லில் தொனிப்பதை நுட்பமாய் உணரலாம்.

அவ்வாறே தேவையான மழை பெய்து அளவான உற்பத்தியைத் தருவதுபோலக் கூடுதலாகத் தேவையான காலத்தில் வேண்டும் போதெல்லாம் வேளாண்மைக்கு உதவியாகப் பெய்து அளவுக்கு மீறிய விளைச்சலைத் தந்தாலும் தரும் என்ற பொருள் நுட்பம் எடுப்பதும் என்பதினும் எடுப்பதூஉம் என்பதில்தான் உள்ளது.

இல்பேருண்மையை உலகியல் நிலையில் உணரலாம் என்பதால் அளபெடை என்பதை இட்டுரைக்க வேண்டிய தேவை இல்லாதபோது இட்டுரைத்த உண்மையால் உணரவாய்ப்பாகக் கருத இடந்தருவதால் நீட்டம் வேண்டின் என்ற தொல்காப்பியரின் கருத்து உண்மையாகிறது எனலாம் என்பதால் தழீஇஇ என்பதும் பொருள் நுட்பமுடையதாகும்.

இல்லாமை கூறப்படும் சிறப்பைச் செய்யுளில் தொல்காப்பியர் கூறும் நோக்கு என்றதோர் இலக்கணக் குறியீட்டாலும் உணரலாம். மேலும் தொல்காப்பியர் சொல்லதிகார எச்சவியலில் கூறும் "தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்" என்ற நூற்பா உணர்த்தும் பொருள் அடிப்படையிலான குறிப்பெச்சத்தாலும் உண்மை உணரலாம் என்க.

எனவே அளபெடை கூறுவதை ஒரோவழி பொருளடிப்படையிலும் கூறலாம் என்பதால் கட்டுரையாளர் கூறுவது போல அவ்வாறொலிப்பார். பொருளறியா மழலையர் என்ற கருத்து திருத்தத்திற்குரியதாகும்.

அடுத்து கட்டுரையில் குறிப்பிட்ட சென்ற ஆண்டு, கடந்த ஆண்டு எனும் சொற்களைச் சென்றாண்டு, கடந்தாண்டு என்றல் போல இந்த ஆண்டு, இந்த ஆள் என்னும் சொற்கள் இந்தாண்டு, இந்தாள் எனக் கூறுவதாகக் கட்டுரையாளர் குறித்ததிலும் திருத்தம் வேண்டும்.

இந்தாண்டு, இந்தாள் என்பன பேச்சு வழக்கு. எழுத்து வழக்கில் இல்லாமை எழுதப்படாமல் இவ்வாண்டு, இவ் ஆள் அல்லது இவ்வாள் என்றே எழுதிக் காட்டுவதே வழக்கமாகும். உலகியலாக எதார்த்த நடையில் அதை எழுதுவோர் இந்தாண்டு, இந்தாள் என எழுதுவதேயன்றிச் செவ்வியல் நடையில் கட்டுரைப் பாங்காக இந்தாள் இந்தாண்டு என எழுதுவது இல்லவே இல்லை என்பதால் இந்தக் கருத்திலும் திருத்தம் கொள்ளலாம் என்க!

அடுத்து, யகர வகரங்களேயன்றி ஞகர, நகரங்களும் உடம்படுமெய்யாக வருவது பற்றித் தொல்காப்பியத்தில் விதியில்லை என்று கட்டுரையாளர் கூறுவதிலும் திருத்தம் வேண்டும் என்க! ஏனெனில், உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் எனத் தொல்காப்பியர் கூறியதில் யகர வகரங்களையே குறிப்பிடாதபோது நகரங்களைக் குறிப்பிடவில்லை எனக் கூறுவது பொருந்துமோ?

தொல்காப்பியர் கூறாத யகர வகரங்கள் பற்றி உரையாசிரியர் கூறியதையே பவணந்தியார் கூறினாரேயன்றி அவராகக் கூறவில்லையாதலால் அவர் யகர, வகரங்களை மட்டும் வரைந்தோதியமையைக் குன்றக் கூறலாகப் பவணந்தியார் மீது குறைகூறுதலிலும் திருத்தம் வேண்டும் எனலாம்.

அடுத்து, உடம்படுமெய் என்பது உயிரும் உயிரும் சேருங்கால் பொருள் மாற்றம் இல்லா நிலையில் புணரும் என்பதாகக் கட்டுரையாளர் கூறுவதிலும் திருத்தம் வேண்டும் எனலாம்.

தலைவன் என்ற சொல் தலைமைப் பண்புக்குரியவன் என்ற பொருளைக் குறிப்பது. தலை + அன் ; வ் உடம்படு மெய். தலையன் என்ற சொல் தலையை உடையவன் என்ற பொருளைக் குறிப்பது. தலை + அன்; ய் உடம்படுமெய், தலைமைப் பண்புடையவரெல்லாம் தலைமைப் பண்பாளர் எனக்கருத வாய்ப்பில்லாததால் தலைவன், தலையன் என்ற சொற்களில்

உள்ள வகர யகரங்கள் பொருள் வேறுபாட்டை உணர்த்துவதும் உண்டு எனலாம். இங்ஙனம் உணர்த்துவது தேவையான இடங்களில் ஒரே வரியாகக் கருத வேண்டுமேயன்றி எல்லா இடங்களுக்குமான பொதுமைக் கருத்தாகக் கொள்ள வாய்ப்பில்லை. எடுத்துக்காட்டாக, கோயில், கோவில் என்பனவற்றில் பொருள் மாற்றம் இல்லை. ஆனால் மாவிலை மாயிலை என்பனவற்றில் பொருள் மாற்றம் உண்டு. மாயிலை என்பது மாமரத்து இலையைக் குறிக்கும். மாவிலை என்பது மா என்ற கன்றுக்கான விலையைக் குறிப்பதாகவும் பொருள்படும். எனவே பொருள் மாற்றத்திற்குரிய நிலையில் ஒரோ வழி யகர வகர உடம்படு மெய்கள் பயன்படும் என்பதால் இந்தக் கருத்திலும் திருத்தம் வேண்டும் என்பதை உணரலாம்.

அடுத்து ஆங்கிலத்தில் இரண்டுயிர்கள் இணைந்தொலித்தல்போலத் தமிழில் இல்லவே இல்லை எனக் குறை காண்பதிலும் திருத்தம் வேண்டும் என்பது என் கருத்து. ஒவ்வொரு மொழிக்கும் உள்ள ஒலி உச்சரிப்பை அந்த மொழியோடு உணர வேண்டுமேயன்றி அவற்றைத் தமிழியலோடு பொருத்தி அங்குள்ளது போல் இங்கில்லை என்பது சரியன்று. உதாரணமாகச் சென்னை – தமிழ்ச் சொல் ! இதை ஆங்கிலத்தில் அப்படியே உச்சரிப்பது ஆங்கில முறைப்படியன்று – தமிழ் ஒலிப்பு முறையாகும். ஆண்டுள்ள கிண்டி என் ஊர்ப்பெயர் தமிழன்று. அதை GUINDY என எழுதிக் காட்டுவது ஆங்கில வழியான ஒலிப்பாகும். தமிழில் இந்த ஆங்கிலச் சொல்லை உச்சரிக்க வேண்டுமானால் 'குண்டி' என்றுதான் உச்சரிக்க வேண்டும். எப்படி கிண்டி என உச்சரிக்க முடியும்? என யாரும் வேறுபாடாகக் கூறமாட்டார்கள். ஏனெனில் அந்தந்த மொழிக்கான உச்சரிப்பை அந்தந்த மொழியோடு பார்க்க வேண்டுமேயன்றி வேறொரு மொழி உச்சரிப்பின்படி ஒப்பிடல் பொருத்தமின்றாம் என்க!

எனவே உடம்படுமெய்களில் உடம்படா வாதங்கள் உள்ளன என்பதைத் தமிழளவில் முற்றிலுமாக உணர முடியாது என்பதால் அதனை உணர்வதில் மறுவாசிப்பான திருத்தங்கள் தேவையாம் என்க.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல். (குறள் 113)

# இலக்கியம் காட்டும் விலங்குகள்

## (முதல் பாகம்)

## (சென்ற இதழ் தொடர்ச்சி)

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

விருதுப்பட்டி (விருதுநகர்) கோயில் யானை தறி கெட்டோடிய போது, யானை கட்டும் சங்கிலியை அதன் முன் வீசி, அதைத் தும்பிக்கையால் எடுத்தவுடன் அமைதி நிலை அடையச்செய்து, எல்லோரையும் தீங்கின்றிக்காத்த இளைஞர், பிற்காலத்தில் விடுதலை வீரராகவும், முதலமைச்சராகவும் திகழ்ந்து, கல்விக் கண் தந்த காமராசர் எனப் போற்றப்பட்ட வரலாறு, ஈண்டு நினைந்து, மகிழ்ந்து, பாராட்டத்தக்க ஒன்றாகும். யானையிடமும் மனிதரிடமும் அன்பு கொண்ட அவர்தம் நல்வாழ்வு போற்றுதலுக்குரியது. சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர், அரசர் (தம் படையில்) வளர்த்த யானை கூட, நலமோடு போற்றிப் பாதுகாக்கப்பட்டதை, இலக்கியம் நமக்குக் காட்டுகிறது. யானையின் பெரிய நெற்றி நிரம்புமாறு, பொன்னால் அழகிய வேலைப்பாடுடைய முகபடாம் அணிவிக்கப்பட்டிருந்தது; கவளம் தந்து நன்கு பேணிக்காக்கப்பட்டது; (சேக்கிழார், பெரியபுநா... 47)

...." பொன்னணி ஓடை யானைப் பொருபரி காலாள்..." அனைவரும் பாராட்டும் அருமையான நலத்திட்டம்; வளர்ப்பு யானைகளின் நல்வாழ்வு பற்றிய சிந்தனை, இன்று எவ்வாறு உள்ளது? விலங்கு நல ஆர்வலர்கள் பெருமகிழ்ச்சி அடையும் வண்ணம், தமிழகம் முன்னணி வகிக்கின்றது; ஆண்டுதோறும், திருக்கோயில் / திருமடம் வளர்ப்பு யானைகள், அமைதி தவழும் இயற்கைச் சூழலில் நாற்பத்தெட்டு நாள் ஓய்வும், சிறப்பு உணவும், மருத்துவ வசதியும், உடல் - மன நலம் பேணலும் வழங்கி, நலமாகக் காக்கப்படுகின்ற, மிகச் சிறந்த திட்டத்தை, எல்லோரும் பாராட்டும் வண்ணம், தமிழ்நாடு அரசு யானைகளுக்கான சிறப்பு நலவாழ்வு முகாம்கள் மூலம் தொடர்ந்து நடத்துவதைச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறப்பான இதுபோன்ற திட்டத்தை, ஒவ்வொருமாநிலமும் செயல்படுத்தினால், நம் தாய்த்திருநாட்டில் உள்ள அனைத்து வளர்ப்பு யானைகளுமே பயனும் நலமும் பெறுவது திண்ணம் ! 'தாயினும் சாலப்பரிந்து, மாநில அரசு, செயல்படுத்தும் இந்நலத் திட்டம், யானைகளின் பொன்னான புதுவாழ்விற்கு, ஒருதோரண வாயிலாக

மிளிரும் என்பதே எல்லோரின் நன்னம்பிக்கை ! அனைத்துயிரும் நன்றி பாராட்டி வாழ்த்தும் சிறப்பு வளர் திட்டம் தொடர்க!

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறுஒன்று அறியேன் பராபரமே !

– தாயுமானவர்; பராபரக்கண்ணி.

## யானையின் வீரம்

அரசனின் நான்குவகைப் படைகளில், முதன்மையானதாகக் கருதப்பட்ட வலிமை மிக்கது, யானைப்படை ! சயங்கொண்டார், பரணியில், யானைப்படை விவரிக்கப்படும்; கலிங்கத்துப் பரணி மட்டுமல்ல, தக்கயாகப் பரணி முதலான பல நூல்களும் உள ; களவழி நாற்பது முதலான நூல்களை நோக்குக ; புறப்பொருள் வெண்பாமாலை ஆய்க. திருவள்ளுவர் யானையின் வீரத்தைப் போற்றி, கண்ணஞ்சா, வேலாள் முகத்த களிறு ! என்றதை மீண்டும் ஈண்டு நினைக, பொய்கையார் பா :

உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பருதி சுமந்தெழுந்த யானை, இருவிசும்பில்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை அட்ட களத்து.

மதுரை அறுவை வாணிகன் ( ஆடை விற்பனை ) இளவேட்டனார், பெரிய புலியைக் கூட, யானை தன் வீரத்தால் வென்றுவிடும் என்பதனைச் சான்றுரைக்கிறார் ;

இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்குல்
அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு.... அக. 272

## யானை, விலகிநடந்து, வாழும் சூழல் :

சிங்கத்தில் ஒருவகை, ஆளி. இதில், ஆண், ஒருத்தல் எனப்படும். இவ்விலங்கு, பெரிய ஆண் யானையின் கொம்பைப் பிடுங்கிக் குருத்தைத் தின்னும் கொடுமை வாய்ந்ததென, மதுரை இளங்கௌசிகனார்

பாடியுள்ளதால், வலிமைக்குப் பெயர் பெற்ற யானை கூட, ஒதுங்கிச் சென்று வாழும் கட்டாயமும் கானகத்தில் இருந்ததை, இலக்கிய வாசகர், எளிதில் யூகம் செய்யலாம்.

ஆளி நல்மான் அணங்குடை ஒருத்தல்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப,
ஏந்தல் வெண்கோடு வாங்கி, குருகருந்தும்........ அக. 381

அதுபோலவே, புதர்கண்டு பாம்பென யானை அஞ்சியதை, அழகுறப் பாடலில் காட்டியுள்ளார். கருவூர்க்கந்தப் பிள்ளைச் சாத்தனார். எனவே, பாம்பிடமிருந்து விலகி வாழ்ந்ததும் இதனால் பெறப்படும் கருத்தாகும்.

இரவுப் புனம்மேய்ந்த உரவுச்சின வேழம்
தண்பெரும் படாஅர் வெரூஉம்.................. அகம். 309

பாம்பென ஒதுங்குவதா, பழுது (இடறு) என ஒதுக்குவதா? என்னும் பழமொழியை நினைக.

## யானை நடை, கதைநாயகனுக்கு உவமை :

சான்றோர் கவிபோலத் திகழ்ந்த கோதாவரியாற்றங்கரையில், இளமைப்பீடுடன் ஆண் யானை ஒன்று நடந்து வந்தது; நீர் அருந்தியது; மீண்டும் நடந்து சென்றது. சீதை, இக்காட்சியைக் கண்டாள்; இராமனைப் பார்த்துப் புதியதோர் முறுவல் பூத்தாள்! ஏன்? அந்நடை, இராமனின் நடைக்கு உவமையாயிற்று! கவிப்பேரரசர் கம்பர் வடித்த பா :

"ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன், உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர்முறுவல் செய்தான்;
மாதவள் தானும் ஆண்டுவந்து நீருண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்!"

(போதகம் = ஆண் யானையாகிய களிறு)

– கம்ராமாயணம், ஆரணிய காண்டம், சூர்., பா. 5

## பாதுகாக்கப்பட்ட தேசிய செல்லப்பிராணி :

சுறுசுறுப்பானது; தும்பிக்கை என்னும் ஒருகை கொண்டு நம்பிக்கை அளிப்பது; எப்போதும் அசையும் இயல்புடையது; உடல் அசைவுகளுக்கு ஓய்வு

தரும் நேரத்திலும் காதுகளை அசைத்தவண்ணம் இருக்கும்; காட்டில் வாழ்ந்தால் கூட்டம் பலம்; நாட்டில் வாழ்ந்தால் காப்பாளரின் பரிவும் பாகனும் பலம்; கூர்மையான அறிவும் கேட்கும் திறனும் மோப்ப சக்தியும் அபார வலிமையோடு மனித சமுதாயத்திற்கும் போர்க்களம் முதலாக நெற்களம் ஈறாகத் துணை நின்று வெற்றி குவிக்கும் தொண்டுள்ளமும், அரசு ஊர்தியாதல் முதலாகக் கொட்டு முரசு தாங்கி நடத்தல் வரையாக, திருக்கோயில் வழிபாட்டில் பட்டாடை அணிகலன் உலா மூர்த்தி ஏந்திச் செல்லல் முதலாக, அநபாயன் சேக்கிழாரைப் பாராட்டிய விழாவில் துணை நின்றது வரையாக, எண்ணில் அடங்காச் சாதனைகள் புரிந்த, புரிகின்ற யானை நிகர் யானைதான் ! அண்டை மாநிலங்களிலும் பெருவிழா நாள்களில் யானைகளைப் பட்டாடை முகபடாம் அணிகலன்களால் அழகுமிக்கு அணிவகுத்து, புகழ் கூட்டும் விநாடி எடுத்த வண்ணப் புகைப்படம் ஏந்திவரும் ஏடுகளைக் கண்டு மகிழ்வோர் அளவற்றோர். இவை, காட்டில், உணவும் நீரும் பெற, ஆண்டுதோறும் வலசை செல்கிற திரும்புகிற வழித்தடம் தடையும் இடையூறும் இன்றி அமைந்து விட்டால், வழிதடுமாறி நாட்டு வயல்வெளிகளில் நுழையும் பேச்சுக்கே இடமில்லை எனச் சுற்றுச் சூழல் / விலங்கு நல ஆர்வலர்கள் விண்டுவைக்கின்றனர். காடு தழைக்க, இவற்றின் வலசை மூலமாகப் பரவும் மர விதைகள் முக்கிய காரணமாம். மனிதர்களைப் போலவே, கரும்பையும் பலாவின் கனியையும் மிக விரும்புவன, யானைகள், அறிவியல் வளர்ச்சிமிகு இக்காலத்தில், நவீன கருவிகளின் துணை கொண்டு, அவற்றில் ஒன்றிரண்டு யானைகள், சில சமயம், தறிகெட்டோடுவதேன்? தீங்கு நேராமல் தடுப்பதெப்படி? என ஆய்ந்து உலகிற்குரைத்தால், அது மிகப்பெரும் அறிவியல் கொடை எனப் புகழ் பெறும் ! "யானைவரும் பின்னே, மணிஓசைவரும் முன்னே" என்னும் பழமொழியும், பாகன் இடுவித்த எச்சரிக்கை ஒலிக்கருவிக் கொடையின் சிறப்பைக் கூறுவது தானே!

"பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களிறு இழந்த பைதற் பாகன்
அதுசேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலை
வெளில்பா ழாகக் கண்டு கலுழ்ந்தாங்கு...." புற., 220

என்னும் வரிகள், பாகனின் பாசநெஞ்சின் படப்பிடிப்பின் வரிகள்!

யானை புக்க புலம் உவமையாதல் : யானை தழை, தாவரம் உண்ணும். பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் கூறிய பாடலில்,

**"யானை புக்க புலம்போலத்**

**தானும் உண்ணான் உலகமும் கெடுமே !"** என நிறைவு செய்தார். பாடலின் தொடக்கத்தில், "நெல்லை அறுவடை செய்து, யானைக்குக் கவளம் ஆக்கித் தரின், பல நாள் உண்ணும்; ஆனால், பரப்பளவு மிக்க (முற்றிய) நெல் பயிரில், யானை தானே புகுந்து உண்டால், வாயால் உண்ணும் நெல்லைவிடக் கால் மிதித்து பாழாகும் நெல்லே அதிக அளவாம்?" என்னும் ஆயிரத்தாண்டுகள் மாறா உண்மையைப் பா வரிகளில் பகன்றார்; (கவளம் = சோற்றுக்கவளம்)

**"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே**
**மாநிறை வில்லதும் பன்னாட் காகும்**
**நூறுசெறு ஆயினும் தமித்துப்புக் குணினே**
**வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்...."** புற., 184

அரசனின் முயற்சிக்குக் குழியில் வீழ்ந்த யானை, கோட்டால் குத்திக் குழிதூர்த்து மேல்வரும் செயல் உவமை ஆதலும், ஒரு பிடி படியும் சிறிய இடம், ஏழு களிறுக்குக் கவளம் ஈதற்குரிய வளம் மிக்கதும், சிந்தைக்கு விருந்து !

அன்புடன் வழங்கிய "அண்ணல்" அடை :

அண்ணல் = பெருமை, யானையின் பெருமையை அறிந்தோர், அதன் பெயருக்கு முன்னர் அண்ணல் எனச் சேர்த்துக் கூறி மகிழ்ந்து கொண்டாடினர்.

அண்ணல் மழ களிறு - பதி., 12 : 12

......... அண்ணல் யானை, அணி தேர் புரவி......... நறுந்தொகை பா (தெள்ளிய)

அண்ணல் என அன்போடு அடைதந்து கவிதை பாடிய ஆயிரத்தாண்டு புலவர் புகழுரை பரிசாகப் பெற்ற யானைகளின் பெருமையே பெருமை !

எட்டுத்தொகை முதலாகப் பல இலக்கியங்களில் தமக்கெனத் தனியானதோர் சிறப்பிடம் பெற்றவை, காட்டு யானைகள் மட்டுமல்ல, வளர்ப்புக்கு வாய்ப்பளித்து, நாட்டிற்குழைப்பை நல்கி மாந்தர்க்குத் துணை செய்த, பழக்கிய யானைகளும்தாம் !

பட்டியல் : பரி., 10 : 42, 44 போல, யானைக்குக் குறிக்கப்பட்ட சில சொற்கள் தவிர்த்து, ஆறு சொற்களால் யானை குறிக்கப்பட்ட இடங்களின் தோராயப் பட்டியல்......... யானைப் பாக்களஞ்சியம் ஏழுநூல் தொகுதி வெளியிட ஆர்வமூட்டும்.

## அட்டவணை (ஒன்று)

(இப்பட்டியல், அவ்வச்சொல் அவ்வந்நூலில் பயின்றுவரும் இடங்களின் எண் மட்டுமே; பொருள் அளவில் தொகுப்பன்று)

| சொல் | களிறு | குஞ்சரம் | பிடி | யானை | வாரணம் | வேழம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| நற்றிணை | 4 | - | 2 | 15 | 2 | 3 | 26 |
| குறுந்தொகை | 7 | - | 2 | 17 | - | 2 | 28 |
| ஐங்குறுநூறு | 2 | - | 1 | 13 | - | 1 | 17 |
| பதிற்றுப்பத்து | 32 | 2 | 3 | 28 | - | 1 | 66 |
| பரிபாடல் | 10 | - | 7 | 7 | 3 | 1 | 28 |
| கலித்தொகை | 22 | - | 5 | 18 | 2 | 7 | 54 |
| அகநானூறு | 46 | 1 | 28 | 93 | 4 | 9 | 181 |
| புறநானூறு | 56 | 1 | - | 68 | 2 | 5 | 132 |
| மொத்தம் | 179 | 4 | 48 | 259 | 13 | 29 | 532 |

## அட்டவணை (இரண்டு)

(இப்பட்டியல், அவ் வச்சொல் அவ்வந்நூலில் பயின்றுவரும் இடங்களின் எண் மட்டுமே; பொருள் அளவில் தொகுப்பன்று)

| சொல் | களிறு | குஞ்சரம் | பிடி | யானை | வாரணம் | வேழம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | 1 | - | 1 | - | - | 1 | 3 |
| பொருநர் ஆற்றுப்படை | 2 | - | 2 | - | - | 2 | 6 |
| சிறுபாண் ஆற்றுப்படை | 1 | - | 2 | 2 | - | - | 5 |
| பெரும்பாண் ஆற்றுப்படை | 5 | - | 4 | 4 | - | 2 | 15 |
| முல்லைப் பாட்டு | - | - | 1 | 1 | - | 1 | 3 |
| மதுரைக் காஞ்சி | 12 | - | 2 | 7 | - | 2 | 23 |
| நெடுநல்வாடை | 2 | - | 1 | 1 | - | 1 | 5 |
| குறிஞ்சிப் பாட்டு | 3 | - | - | 2 | - | 1 | 6 |
| பட்டினப்பாலை | 2 | - | 2 | 3 | - | - | 7 |
| மலைபடுகடாம் | 5 | - | 2 | 5 | - | 2 | 14 |
| மொத்தம் | 33 | - | 17 | 25 | - | 12 | 87 |

அட்டவணை/பட்டியல் உணர்த்தும் அரிய செய்திகள்

1. யானை என்னும் சொல், எட்டுத்தொகையில் 259

பத்துப்பாட்டில் 25

என, மொத்தம் வந்துள்ள இடங்கள் 284

2. குஞ்சரம் 4 இடம், வாரணம் 13 இடம்

எட்டுத் தொகையில் அமைந்துள்ளன; ஆயினும், இவ்விரு சொற்களும் பத்துப்பாட்டில் கிடையா.

3. இராமாவதாரத்தில் கம்பர் குறித்த போதகம் என்னும் சொல், மேல் 18 நூல்களில் கிடையாது!

4. யானை, யானையைக் குறித்த வேறு சொற்கள் எனத்

| | |
|---|---|
| தொகையில் | 532 |
| பாட்டில் | 87 |

ஆக 619 உள்ளன; இவற்றுள், யானையைக் குறித்த வேறு சொற்கள், பாடல்களில் அமைந்துள்ள இடங்களில், யானை என்னும் பொருள் குறித்தலை எத்தனை எனக் கண்டறிந்து, வேறு பொருள் குறித்தவற்றின் எண்ணிக்கை, கழித்துக் கணக்கிடப்பட வேண்டும்; அப்போதுதான், மதிப்பீடு தோராயம் என்பதை நெருங்கும். எளியேனின் சிறிய முயற்சியில் துல்லியத்திற்கு வாய்ப்பு கிடையாதெனினும், ஒட்டுமொத்தமாக, சங்க காலத்தில், இடைக்காலத்தில், அரசராட்சிக் காலத்தில், யானை எவ்வளவு முக்கியமான இடத்தை வாழ்வியலில் பெற்று, மாந்தர்தம் நினைவில் நிறைந்திருந்தது என வியப்பதற்குத் தடை ஏதுமில்லையல்லவா?

5. ஆணைக்கும் அடிசறுக்கும், ஆனைமலை என்னும் தொடர்களில் ஆனை, யானையைக் குறித்ததாகக்கொள்ளின், பாட்டிலும் தொகையிலும் அச்சொல்லைக் காணவரிதாக உள்ளது; இது சிந்தனைக்குரியது!

6. அறிஞர்குழு, யானை பாக்களஞ்சியம், நூல், பதிப்பிக்கலாம்!

**யானையின் தும்பிக்கை நேர்நம்பிக் கைகொள் ;**
**அறிவன் புவமேயம், கோடு !** – சி.பா.

யானை நலம் காத்து, காடும் நாடும் சிறக்க அனைவரும் உதவுவோம்!

## (வரையாடு) வருடை :

தமிழகத்துக்கே உரிய சிறப்பு விலங்கெனத் தனிமதிப்பைப் பெற்று வாழ்வது, வரையாடு (வரை = மலை) மலையில் வாழும் ஆட்டினம், வரையாடு. செங்குத்தான மலை முகடுகளில் சுலபமாகச் சுற்றித்திரியும் ! இவ்வியல்பால், அதனை உவமையாக்கினார் கடியலூர் உருத்திரங்கண்ணனார் :

(வரையாடு வருடை = மலையில் குதித்தோடும் மலையாடு)

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகம் ஏற்றுமதி இறக்குமதி மூட்டைகள் மலைபோல் குவிந்திருக்க, அவற்றின் மேல் ஆட்டுக்கிடாய்கள், ஏற்றை நாய்கள் ஏறிக்குதித்து விளையாடும் காட்சி, (மலைகளில்) வரையாடு வருடை (குதித்து) விளையாடும் நிகழ்வு போல் இருக்கும் !

**.... மதிநிறைந்த மலிபண்டம்**
**பொதிமூடைப் போர்ஏறி,**
**மழைஆடு சிமைய மால்வரைக்கவாஅன்**
**வரைஆடு வருடைத் தோற்றம் போல,**
**கூர்உகிர் ஞமலிக் கொடுந்தாள் ஏற்றை**
**ஏழகத் தகரோடு உகளும் முன்றில்........** - பட்டினப்பாலை

பிறந்து ஒருவாரமே ஆன குட்டி, தான் முன்னர் எப்போதுமே பார்த்திராத பகைவிலங்கைக் கண்டு, மலையின் செங்குத்தான சரிவில், மிகச் சிறிய இடத்தில் ஏறி நின்று, தன்னைக் காத்துக் கொள்கின்றது என்னும் அண்மைச் செய்தி, இன்னமும் பாடலில் பதிவாகவில்லை !

(வருடையை, மான் இனம் என உரைப்பர் தமிழறிஞர்)

வருடை மறி தாய்ப்பால் அருந்தி, செங்குத்தான மலை நிழலில் துள்ளி விளையாடுதல் :

**செல்வரைச் சேக்கை வருடை மான்மறி**
**சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்**
**பெருவரை நீழல் உகளும் நாடன்** - குறு. 187

கலைமானும் மலையாடுகளும் தாவுதல் :

............ கடுங்கலை

கடும்பு ஆட்டு வருடையொடு தாவன உகளும்........ - நற்றிணை 119

பெரிய மலைமேல் குறுகிய கால்களை உடைய வருடை வாழ்தல் :

**நெடுவரை மிசையது குறுங்கால் வருடை..... - ஐங்குறு., 287**

மறி, கருங்குரங்கைக் கண்டு, வெருளுதல் :

**...வெருள்பு உடன்நோக்கி, வியல்அறை யூகம்**
**இருள்தூங்கு இறுவரை ஊர்பு இழிவு ஆடும்**
**வருடைமான் குழவிய வளமலை...... - கலி. 43**

மான்குழவி வளர்ப்பு உவமையாதல் :

**....வழைவளர் சாரல் வருடை நன்மான்**
**குழவி வளர்ப்பவர் போல........... - கலி. 50**

வருடை மான்குட்டி திரியுமிடம், யானை துயிலல் :

**........... இரும்பிடி**
**தூங்குஇலை வாழை நளிபுக்கு ஞாங்கர்**
**வருடை மட மாறி ஊர்வு இடை............ - மேலது**

## வருடைக்குள்ள தனித்திறன் :

தாய்ப்பால் அருந்தும் குழந்தை, தன்கால் பெருவிரலைத் தன் வாய்க்குக் கொண்டுவந்து சூப்பல் ( சுவைத்துப் பார்த்தல் ) கண்டு மாந்தர் வியப்பர்; ஏனெனில், அவர்களால் அவ்வாறு செய்துகாட்டல் இயலாது; அக்குழந்தையே வளர்ந்தபின் அவ்வாறு செய்ய இயலாது; குழந்தைக்கே உரிய தனித்திறன் அது. அதுபோல, விலங்குகளுக்கும் தனித்திறன் உண்டு. வருடையின் தனித்திறனை, நன்னனைப் பாடும் மலைபடுகடாம் அழகுறக்காட்டுகிறது.

மலைவாழ் வருடை, மலை உச்சியில் ஏறும் இயல்பு உடையது; அம்மலையில் மிக விரைந்து ஓடக்கூடிய (குனிதி) திறன் உடையது.

**மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்**

**வரைவாழ் வருடை வன்தலை மாத்தகர்....** - மலைபடுகடாம், 502-503

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், இவ்வரிகளில் பெய்த சொற்கள், இலக்கிய இன்ப மழை பொழியும் கார் மேகங்களோ ! நிலத்தைக் கவர்ந்தது போல ஓடுமாம் வருடை ! அதுமட்டுமா? விரைந்தோடலையும், குதிரையையும் நினைவூட்டும் பரி என்னும் சொல்லைப் பெய்த அழகே அழகு ! இத் தனித்திறனை வியந்துபேசும், நீலகேசிஉரை, எட்டுக் கால்களையுடைய வருடை என வியக்கும் ! தேசீய, மாநிலப் பெருமை சேர்க்கும் அரிமா, புலி, யானை, வருடை இனம் ஆகியனவற்றைக் கண்போல் காப்போம் !

## வாசகர் வாசகம் 1

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். தமிழகத்தில் நகரங்களின் அமைப்போடு துறைமுகப்பட்டினங்கள் எவ்வாறெல்லாம் வாணிபம் ஆற்றின என்பதற்கான ஆதாரங்களை இலக்கிய மேற்கோளோடு காட்டி, தமிழரின் கடல் வணிகச் சிறப்பின் பெருமையை ஸ்ரீதர் நன்கு விளக்கியிருந்தார். அரிமா, புலி, களிறு போன்ற விலங்கினங்கள் இலக்கியங்களில் எவ்வாறு இடம் பெற்று சிறப்புற்றுள்ளன என்பதற்கான விளக்கம் பாண்டுரங்கநாதரிடமிருந்து கிடைத்தது. பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணமுண்டா? இறைவனே சான்று பகர்ந்து உண்மையை நிறுவியிருந்த பாங்கினை இராசம் மரகதம் பளிச்செனக் காட்டியிருந்தார். திருவிளையாடல் திரைப்படக் காட்சிகள் கண்முன் வந்தன. பாரதியின் பாஞ்சாலி சபதத்தை முன்னிறுத்தி அரிய எடுத்துக்காட்டுகள் தந்து பாரதி கண்ட புதுமைப் பெண்ணை ரெஜினா நம் கண்முன் நிறுத்தியிருந்தார். திருக்குறளுக்கான உரைகாணும் நெறிமுறைகளை எடுத்துரைக்க வந்த அரங்கசாமி தொல்காப்பியப் பெருமையையும் திருக்குறளின் அருஞ்சிறப்பையும் பட்டியலிட்டிருந்தார். மொத்தத்தில் சென்ற மாத செந்தமிழ் இதழ் கவிதைகளோடும், நறுமணம் கமழ்ந்து வாசகர் மனம் ஈர்த்தது !

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி**

# திருக்குறளில் ஓசை

ஆறுவிரல் ஐம்பொறி

வெண்பா முதலா விளம்புநாற் பாவொலி
செப்பல் அகவல் சீர்கெழு துள்ளல்
தூங்கலென்ப தொண்ணூற் புலவர்.

– யாப்பருங்கலக் காரிகை – பக்கம் – 55

என்ற நூற்பாவின் வழி வெண்பாவிற்கு செப்பலோசையும் அகவற்பாவிற்கு அகவல் ஓசையும் கலிப்பாவிற்கு துள்ளலோசையும் வஞ்சிப்பாவிற்கு தூங்கலோசையும் உரித்து என்பதை அறியலாம்.

வெண்பாவின் செப்பலோசை மூன்று வகைப்படும். அவை ஏந்திசைச் செப்பலோசை, தூங்கிசைச் செப்பலோசை, ஒழுகிசைச் செப்பலோசை என்பனவாம். இம்மூன்று ஓசைகளும், திருக்குறளில் (குறள் வெண்பாவில்) அமைந்துள்ளதைக் காண்போம்.

## ஏந்திசைச் செப்பலோசை

யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. – குறள். 398.

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்ல வர். – குறள் – 973

இவ்விரு குறட்பாக்களிலும் இறுதிச் சீர்கள் தவிர மற்ற சீர்கள் மூவசைச் சீர்களாக (காய் முன் நேராக) அமைந்துள்ளதை நோக்குக. இக்குறட்பாக்களில் உள்ள தளைகள் அனைத்தும் வெண்சீர் வெண்டளைகளாகவே அமைந்துள்ளன. எனவே இவ்விரு குறட்பாக்களிலும் ஏந்திசைச் செப்பலோசை அமைந்துள்ளது. இக்கருத்தைக் கூறும் நூற்பாவைக் காண்மின்.

வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்பல் என்மனார் புலவர்.

– யாப்பருங்கலக் காரிகை – பக். 57

திருக்குறளில் ஏந்திசைச் செப்பலோசை இவ்விரண்டு குறட்பாக்களில் மட்டுமே அமைந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

தூங்கிசைச் செப்பலோசை

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். - குறள் - 1121

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். - குறள் - 3

இவ்விரு குறட்பாக்களிலும் இறுதிச்சீர்கள் தவிர மற்ற சீர்கள் ஈரசைச் சீர்களாகவே ( விள முன் நேராகவும் மா முன் நிரையாகவும் ) அமைந்துள்ளதை நோக்குக. இக்குறட்பாக்களில் உள்ள தளைகள் அனைத்தும் இயற்சீர் வெண்டளைகளாகவே அமைந்துள்ளன. எனவே இவ்விரு குறட்பாக்களிலும் தூங்கிசைச் செப்பலோசை அமைந்துள்ளது. இக்கருத்தைக் கூறும் நூற்பாவைக் காண்மின்.

இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்பல் என்மனார் புலவர்.

- யாப்பருங்கலக் காரிகை - பக் - 5

திருக்குறளில் தூங்கிசைச் செப்பலோசை அமைந்துள்ள குறட்பாக்கள் மிகச் சிலவே உள்ளன.

## ஒழுகிசைச் செப்பலோசை

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும் - குறள் 260

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை - குறள் 411

இவ்விரு குறட்பாக்களிலும் இறுதிச் சீர்கள் தவிர மற்ற சீர்கள் மூவசைச் சீர்களாகவும் ஈரசைச் சீர்களாகவும் ( காய் முன் நேராகவும் மா முன் நிரையாகவும் விள முன் நேராகவும் ) விரவி அமைந்துள்ளதை நோக்குக. இக்குறட்பாக்களில் வெண்சீர் வெண்டளைகளும் இயற்சீர் வெண்டளைகளும்

விரவி அமைந்துள்ளன. எனவே இவ்விரு குறட்பாக்களிலும் ஒழுகிசைச் செப்பல் ஓசை அமைந்துள்ளது. இக்கருத்தைக் கூறும் நூற்பாவைக் காண்மின்.

**வெண்சீ ரொன்றலும் இயற்சீர் விகற்பமும்**

**ஒன்றிய பாட்டே ஒழுகிசை என்ப. யாப்பருங்கலம் – பக். 57**

திருக்குறளில் பெரும்பான்மைக் குறட்பாக்கள் ஒழுகிசைச் செப்பலோசையில் அமைந்துள்ளன.

திருக்குறளில் உள்ள அனைத்துக் குறட்பாக்களும் (1330) இம்மூன்று வகைகளுள் அடங்கி விடுகின்றன. கோடி கோடி வெண்பாக்கள் இயற்றினாலும் அவ்வெண்பாக்கள் அனைத்தும் இம்மூன்று வகைகளுள் அடங்கும். என்னே வியப்பு!

கோடி சிந்தனைகள் குறள் வெண்பாவுள் அடங்கும் என்பது உண்மை. அதனால்தான் திருக்குறள் உலகப் பொது மறையாக நிலைத்துள்ளது.

---

## வாசகர் வாசகம் ②

அய்யா வணக்கம்.

ஏப்'013 இதழ் பெற்றேன். மரண பயம் தவிராதே... என்று மரண அச்சம் குறித்துக் கூறிய வள்ளலாரே, "பயத்தை விட்டொழித்தே எனைக்கிதுபோதும்" என்று கூறியிருப்பது ஞானிகட்கும் மரணபயம் உண்டு என்பது புலப்படுகிறது. வீரசக்திவேலின் வள்ளலாரின் அச்ச மெய்ப்பாடு குறித்த ஆய்வு சிறப்பானது. தமிழுக்கே உரிய 'ழ'கரச் சிறப்பு குறித்த கட்டுரை அமிழ்தே; நன்னன் குறித்தும், அவனால் கொலைப்பட்ட பெண் ( இன்றைய மாசாணியம்மன் ) குறித்தும் கோசர் வாழ்வு குறித்தும் தகவல் தேடிக் கொண்டிருந்த நேரத்தில் திருமதி. பா. ஜெயமேரி கட்டுரை படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சமூகச் சிந்தனை மறந்து கவிதை படைக்கிறவன் கவிஞனல்ல ஆனால் நம் சங்கப் புலவோர் பாக்கள் சமுதாய நிகழ்வுடன் செறிவுடன் திகழ்கினறன என்பதும் நல்ல ஆய்வு.

அன்புடன்,

**ந. பாண்டுரங்கன்**, மதுரை

# அறுபத்து நான்கு கலைகள்

தெய்வத்திருமதி. இராசம் மரகதம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர் – கவிச்சக்கரவர்த்தி கம்பர்

1. ஆடல் (நாட்டியம்)
2. இசைக் கருவிகள் செய்தலும் அவற்றை வாசித்தலும்
3. ஆடை அணிகலன்களால் ஒப்பனை செய்தல்
4. பலவகை உருவங்களைத் தோற்றுவித்தல் (வேடம் காட்டி நடிப்பித்தல்)
5. அமளி அமைத்தல் (படுக்கை) கம்பளம் விரித்தல், மலர் தொடுத்தல்
6. சூது முதலிய பல்வகை விளையாட்டுக்கள்
7. ஆடவரும் மகளிரும் கூடி இன்புற்றிருத்தல்
8. மலர்களிலுள்ள தேனால் கள், குடிநீர் ஆகியவற்றை உண்டாக்குதல்
9. உடலில் தைத்த அம்புகளை மெல்ல எடுத்தல், நரம்புக் கொப்புளங்களை அறுத்து ஆற்றுதல்
10. மணப் பொருள்கள், சுவைப் பொருள்கள் கொண்டு சோறு கறி சமைத்தல்
11. மரத்தில் பழங்களை விளைவித்தல், அவற்றைக் காத்தல்
12. கற்கள், உலோகங்கள் ஆகியவற்றைப் பிளத்தல், அவற்றை நீறாக்கல்
13. கருப்பஞ்சாற்றினால் பாகு, வெல்லம், சருக்கரை செய்தல்
14. பொன் முதலிய உலோகங்களையும் மூலிகைகளையும் சேர்த்தல்
15. பொன், வெள்ளி முதலியவற்றைத் தனித்தனியே பிரித்தெடுத்தல்
16. உலோகங்களின் கலப்பைப் புதிய முறையில் ஆராய்தல்
17. உப்பு முதலியவற்றை ஆக்கல், அவற்றைப் பிற பொருள்களிலிருந்தும் பிரித்தெடுத்தல்
18. வாள் முதலியவற்றால் குறிவைத்து எறிதல்

19. மற்போர் (உயிர்க்கு அழிவு நேரும்படிச் செய்யலாகாது)
20. ஓரிடத்தைக் குறிவைத்து எந்திரம், அம்பு முதலியவற்றைச் செலுத்துதல்
21. படைகளின் அணிவகுப்புச் செய்தல்
22. யானை, குதிரை, தேர் இவற்றின் கதி விசேடங்களால் போர் செய்தல் (18-22 இவை ஐந்தும் தநுர் வேதத்திண்கண் உள்ளன)
23. பலவகை இருக்கைகளாலும் முத்திரைகளாலும் தெய்வங்களை மகிழ்வித்தல்
24. தேர் செலுத்துதல், யானை, குதிரைகளுக்கு நடைகற்பித்தல்
25. மண், மரம், கல், பொன், வெள்ளி முதலிய உலோகங்களைக் கொண்டு தனித்தனியே பாண்டம் செய்தல், 26, 27, 28ம் இவற்றுள் அடங்கும்.
29. ஓவியம் வரைதல்
30. ஊருணி, வாவி, மேல் மாடம் அமைத்தல், நிலத்தை மேடுபள்ளமின்றிச் சமமாக்குதல்
31. நாழிகை வட்டில் முதலிய பல்வகை எந்திரங்களையும், வாத்தியக் கருவிகளையும் செய்தல்
32. பலவகை வண்ணப் பொருள்களால் ஆடை முதலியவற்றிற்கு நிறம் ஊட்டுதல்
33. நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றின் சேர்க்கையால் அவற்றைத் தடைப்படுத்திச் செலுத்துகின்ற எந்திரத் தொழில்
34. தோணி, தேர் முதலியன செய்தல்
35. நூல் நூற்றல், கயிறு திரித்தல்
36. பலவகை நூல்களால் ஆடை நெய்தல்
37. சாணை பிடித்தல், துளையிடுதல்
38. பொன் முதலிய உலோகங்களின் உண்மைத் தன்மையறிதல்
39. செயற்கைப் பொன், செயற்கைமுத்து முதலியவற்றை உருவாக்குதல்
40. அணிகலன்கள் செய்தல்
41. உலோகப் பொருள்களுக்குப் பூச்சு இடுதல்
42. தோல் பதனிடல்

43. பசு போன்றவற்றின் தோல் உரித்தல்
44. பால் கறத்தல், நெய் உருக்குதல்
45. ஆடை தைத்தல்
46. நீச்சல்
47. பாண்டம் முதலியவற்றை விளக்குதல்
48. ஆடைகளைத் துவைத்தல்
49. மயிர் களைதல்
50. நெய் உருக்குதல்
51. உழுதல்
52. மரமேறுதல்
53. பணிவிடை செய்தல்
54. மூங்கில், புல் முதலியவற்றால் பெட்டி முதலியன செய்தல்
55. கண்ணாடிப் பாத்திரம் செய்தல்
56. நீர் கொணர்தல், நீர் தெளித்தல்
57. இரும்பினால் ஆயுதம் செய்தல்
58. யானை, குதிரை, ஒட்டகம் இவற்றின் பிடரியில் அமைக்கும் தவிசு செய்தல்
59. குழந்தை வளர்ப்பு
60. குற்றத்திற்கேற்ற தண்டனை தருதல்
61. பன்மொழி அறிவு (எழுத, பேச)
62. வெற்றிலை பாக்கு முதலியவற்றைச் சித்தப்படுத்துதல்
63. மேற்சொல்லப்பட்ட கலைகளைச் செய்வதில் உள்ள விரைவுத் தன்மை
64. தாழ்த்தல் தன்மை

(சுக்கிரநீதியிலிருந்து)

---

**இக்கட்டுரையாளர் சென்ற மாதம் (ஏப்ரல் 2013) இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரது மறைவிற்கு மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது.**

---

# வாழ்வியல் மரபுகள் - அக மரபு

முனைவர் பா. திருஞானசம்பந்தம்

தமிழர்கள் மிக நெடிய வரலாற்றுச் சிறப்புமிக்க வாழ்வியல் மரபிற்கு உரியவர்களாகப் போற்றப்படுகின்றனர். பழம்பெருமை மிக்க அத்தகைய வாழ்வியல் மரபினை முன்னோர் செய்து தந்துள்ள இலக்கிய இலக்கணங்கள் வழியே அறிந்து கொள்ள முடிகின்றது. அவ்விலக்கிய இலக்கணங்கள் கூறும் வாழ்வியல் மரபு இருபெரும் வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு காட்டப்படுகின்றது. அவ்வடிப்படைக் கூறுகளே இன்றுவரை தமிழர்களின் மரபாக மதிக்கப்படுகின்றது. தமிழர் வாழ்க்கையிலக்கணத்தை வகுத்துக் கூறும் தொல்காப்பியம் தமிழர் வாழ்வினை அகம், புறம் என இருகூறாகப் பகுத்துக் கூறுகின்றது. ஒத்த அன்புடைய கணவனும் மனைவியும கலந்து வாழும் குடும்ப வாழ்வு அகவாழ்வு என்றும், அவ்வாறு பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் ஒன்றி வாழ்வதற்குரிய அரசியல் வாழ்வு புறவாழ்வு என்றும் வகுக்கப்பட்டன.

## அகமரபு

தலைவன், தலைவி ஆகிய இரு மாந்தர்கள் தலைமைப் பாத்திரங்களாய் பங்கு கொள்ளுகின்றனர். தலைமக்கள் ஒழுகும் ஒழுக்கத்தை ஐந்திணை என்றும் கைக்கிளை பெருந்திணை என்றும் பிரித்துக் கூறுகின்றனர். இவ்வொழுக்கங்களுள் தலைவனும் தலைவியும் விருப்புடன் வாழும் ஐந்திணை ஒழுக்கமே அனைவராலும் வரவேற்கக் கூடியது. ஐந்திணை, அன்பின் வழிவந்த உள்ளத்துணர்ச்சியால் தலைமக்களைப் பிணைப்பது. இத்தகைய இயல்பான வாழ்க்கையையே அகவாழ்வில் பெரிதும் விரும்பினர். இதனை,

**மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**

**செவ்வித் தலைப்படு வார்**

என்ற குறள் குறிப்பிடுகின்ற உயரிய காதல் வாழ்வினை மதித்துப் போற்றினர்.

அகவாழ்வு களவில் தொடங்கப்படுகின்றது. திருமணமாகாத இளைய தலைமகனும் தலைமகளும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வர். தலைவனுக்குப் பாங்கனும் தலைவிக்குப் பாங்கியும் இக்காதல் வாழ்வில் துணைநிற்பர். தலைமக்கள் இருவரிடையே ஏற்படும் சிக்கல்களை பாங்கன் பாங்கியே தீர்த்து

வைப்பார். இக்களவு வாழ்வில் தலைவியைக் காட்டிலும் தோழிக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. தலைவியை சந்திக்க அனுமதியினையும், சந்திக்கும் இடத்தினையும் தலைவன் தோழியிடமே பெறுகின்ற மரபு காதல் வாழ்வில் காணப்படுகின்றது. இக்காதல் வாழ்வு பெற்றோர்க்கும், பிறர்க்கும் தெரியாதவரை களவு வாழ்வு எனப்படுகின்றது.

இக்களவு வாழ்வினைப் பற்றிக் கூறும்போது, உருவும் திருவும் உணர்வும் முதலியவற்றால் ஒத்து விளங்கும் தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டு, அன்பினால் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய், உலகத்தார் அறியாது மறைந்தொழுகுதல் களவாகும். அவ்வாறு மறைவில் நிகழும் ஒழுகலாறு என்னும் கருத்திலேயே களவு எனும் சொல் வழங்கப்பட்டது. இவ்வொழுகலாற்றினைக் களவொழுக்கம் என்பது மரபு. இம்மரபு அகவாழ்வியல் மரபுகளில் ஒன்று.

## திருமண மரபும், கற்பு வாழ்வும்

களவு வாழ்வின் படிநிலை வளர்ச்சியாகக் கற்பு வாழ்வு பேசப்படுகின்றது. தலைமக்களது காதல் வாழ்வினை தோழி அறத்தொடு நிற்றலின் வழியாக தாய், தந்தையர் அறிந்து தலைமக்களுக்குத் திருமணம் செய்து வைத்தல் மரபு. இதனை,

> **"கற்பெனப் படுவது கரணமாடு புணரக்**
>
> ***கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்***
>
> **கொடைக்குரிய மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"**

என்கிறது தொல்காப்பியம்.

திருமணத்திற்கான தலைமக்கள் குறிப்பிடத்தகுந்த நிலைகளில் ஒப்புமையுடையவராக இருத்தல் வேண்டும் என்று கருதப்பட்டுள்ளது. அவ்வொப்புமைகள் இருக்கும்போதுதான் தலைமக்கள் மனம் ஒன்றிய வாழ்வினை வாழ்வார்கள் என்று எண்ணும் மரபு இருந்து வந்துள்ளது. இவ்வொப்புமைப் பற்றிக் கூறும் போது மணம் புரிந்து கொண்டு வாழ விரும்பும் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பத்துப் பண்புகள் ஒத்திருத்தல் வேண்டும் என்பது மரபு. மணமக்களாவோர் இருவரும் ஒத்தகுடியில் பிறந்தவராகவும், தாம் பிறந்த குடிக்கேற்ப ஒழுக்கமுடையவராகவும், தாம் மேற்கொள்ளவிருக்கும் குடும்ப வாழ்க்கையைச் செம்மையாக நடத்தும் திறம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். வயதாலும் பொருத்தம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். அஃதாவது ஆடவன் பதினாறாண்டு

நிரம்பியவனாகவும் பெண் பன்னீராண்டு நிரம்பியவளாகவும் இருத்தல் வேண்டும் என்று கூறப்படுகின்றது.

ஆரியர்க்குரிய மணமுறைகள் என்று பிரமம் முதலாக பைசாசம் ஈராக உள்ள எண்வகை மணமுறைகள் காட்டப்படுகின்றன. ஆனால் தமிழர்க்குரிய மணமுறைகளாக உடன்போக்கினால் உண்டாகும் மணம், பெற்றோர் செய்துவைக்கும் மணம் ஆகிய இரண்டு மணமுறைகளும் தொல்காப்பியத்தால் காட்டப்படுகின்றன. கொடுப்போரின்றியும் கரணமுண்டே என்ற தொல்காப்பியத் தொடர் உடன்போக்கினால் உண்டாகும் திருமணத்தையும், கொடைக்குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதுமே என்ற தொடர் பெற்றோர் செய்யும் திருமணத்தையும் குறிப்பிடுகின்றன.

இவ்விருவகை மணமுறைகளையும் செந்துறை முத்து அவர்கள் காதல் மணம், கொடை மணம் என்று குறிப்பிடுகின்றார்.

இயற்கையில் எதிர்ப்பட்டு மனம் ஒன்றுபட்ட இருவரும் எவரும் அறியாவண்ணம் களவில் கண்டொழுகுவர். சில நாட்கள் அவ்வாறொழுகுங்கால், அவர்களின் களவொழுக்கம் வெளிப்பட்டு விடும். வெளிப்பட்டவுடன் அலர் எழும். அந்நிலையில் அவர்களிருவரும் ஒருநாள் இரவு புறப்பட்டு தலைவனது ஊர் சென்றடைந்து அவனது மனையில் சான்றோர் பலர் முன்னிலையில் முறைப்படி மணம் புரிந்து கொள்வர். இதனைக் காதல் மணம் என வகுத்தனர். இது காதலில் தொடங்கி கற்பில் முடிவுபெறும் மணமாகையால் காதல் மணம் என வகுத்தனர்.

கொடைமணம் என்பது மணமகனோ அவனது பெற்றோரோ திருணமத்தின் பொருட்டு பெண்ணின் வீட்டிற்குச் சென்று மணம் பேசி பெண்ணை அவர்கள் கொடுக்க அப்பெண்ணை மணம் முடிப்பதாகும். பெற்றோர்தம் பெண்ணைக் கொடுக்க பெற்று மணம் செய்ததால், கொடை மணம் என்றனர். ஆக இருவகை மண மரபுகளைத் தமிழர் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

இத்திருமண மரபே கற்பு வாழ்வின் தொடக்க நிலையாக இருந்துள்ளது. கற்பு வாழ்வில் தலைவன் தலைவியரிடையேயான மகிழ்ச்சியும், ஊடல் நிகழ்வுகளாலும், வாயில்களும், அக, புற வாழ்வியல் கடமைகளுக்காக தலைவன் தலைவியை விட்டுச் சில நாள்கள் பிரியும் பிரிவுகளும், பிரிந்து சென்ற தலைவன் குறிப்பிட்ட நாளில் வந்துவிடுவேன் என்று கூற அவன் வரும் நாளை எண்ணி அப்பிரிவுத் துன்பத்தினைப்

பொறுத்து தன்னை ஆற்றியிருந்தாலும் சில சமயங்களில் தலைவியின் துயர் மிக தோழி ஆற்றுவித்தலும், தலைவன் குறித்துச் சென்ற நாட்கள் அவன் வராமலேயே கடந்து செல்ல தலைவி துயரினால் வருந்துதலும், பரத்தையர் பிரிவுகளும், பரத்தையர் செயல்பாடுகளும் அதனால் தலைமக்களுக்குள் நிகழும் ஊடலும் ஆகிய பல்வேறு செயல்பாடுகள் இடம் பெறுகின்றன.

கற்பு வாழ்வு என்பது தலைவன் தலைவியரது இல்லற வாழ்வையே குறித்தது. தலைமக்களது களவினை அறிந்து மணம் முடிப்பதோடு கற்பு வாழ்வு நிறைவடைவது இல்லை. அதன்பின் அவர்கள் நடத்தும் வாழ்க்கைச் செயல்பாடுகளும், நெறிமுறைகளும், அன்பு நிலைகளுமே கற்பு வாழ்வாகிய இல்லற வாழ்வாகக் கருதப்பட்டது. தொன்மை காலத்தில் திருமணத்தின் பின் தலைமக்கள் தனிக்குடும்பத்திலேயே அமர்த்தப்பட்டனர் என்றும் கூட்டுக் குடும்பமாக வாழும் இல்லற வாழ்வு முறை இல்லை என்றும் குறிப்பிடுகின்றனர். புதுமணத் தம்பதிகள் இருவரையும், அவர்களுடைய பெற்றோர்கள் முறைப்படி தனிமைப்படுத்தி, தனி வீடு அளித்து, சீர்பொருள் நல்கித் தனிவாழ்க்கை நடத்துமாறு மனையறம் படுத்தி வந்தனர். தம்பதிகள் இருவரும் இனிது இணைந்து தனிமையில் மனையறம் ஓம்பி வாழ்வது மரபாக இருந்தது என்ற விளக்கம் இல்லற மரபைக் குறிப்பிடுகின்றது.

**கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்**

என்ற அடிகள் கற்பு வாழ்வில் மகளிர்க்குரிய மரபுகளைப் பற்றிப் பேசுகின்றது.

அகவாழ்வினால் பெருமைப்படுத்தும் கற்பு வாழ்வில் மகளிர்க்கும் மிக உயர்ந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது.

தலைமகளுக்கே உரிய உயரிய பண்புகளே இல்லறத்தை சிறப்படையச் செய்வதாகக் கருதப்பட்டுள்ளது.

**அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்**

என்ற சங்கப் பாடல் குறிப்பிடுவதற்கேற்ப கற்பின் மெல்லியல் ஆகிய

தலைவியாலேயே இல்லற வாழ்வு மாட்சியடைவதாகக் கருதும் மரபு இருந்து வந்துள்ளது.

தலைவன் மீது கொண்ட காதலும், அதன் காரணமாக அவன்மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையும் கற்பு வாழ்வில் மகளிர் இயல்புகளாகக் காட்டப்படுகின்றன என்பதனை,

வண்டுபடத் ததைந்த கொடியின் இடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை
கானங் கார்எனக் கூறினும்
யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே

என்ற தலைவியின் கூற்றினால் இல்வாழ்விற்கே உரிமையுடைய காதலையும், இயற்கையைக் கூடப் பொய் என்று கூறும் அளவிற்குத் தலைவன் மீது கொண்ட நம்பிக்கையும் இல்லற மரபு என்றே போற்றப்பட்டுள்ள தன்மை வெளிப்படுகின்றது.

மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய

எனும்போது தலைமகளிடம் சில நேரங்களில் தலைவன் பணியும் நிலை உண்டு என்ற செய்தியினால் இல்லறத்தில் தலைவிக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பிடம் நோக்குதற்குரியது. இதுபோன்ற பல்வேறு சிறப்புகளைக் கொண்ட களவு வாழ்வினையும், கற்பு வாழ்வினையும் ஐந்திணை ஒழுக்கம் என்ற அகவாழ்வு மரபில் அடக்குவர்.

அகவாழ்வில் சிறப்பிடம் தரப்படாத வாழ்வியல் மரபுகளும் இருந்துள்ளன. அவையே கைக்கிளை, பெருந்திணை என்பன.

தலைவன் தலைவி இருவருள் ஒருவர் மட்டும் அன்பினால் இணைந்து வாழ்தலில் விருப்பமுடையவராக, மற்றொருவர் அவ்வன்பு வாழ்வில் விருப்பமின்றி ஒழுகும் ஒழுக்கத்தைக் கைக்கிளை ஒழுக்கம் என்று கூறும் அகமரபும், பொருத்தமில்லாத இருவரது அன்புநிலைகள் பெருந்திணை ஒழுக்கம் என்று கூறும் அக மரபும் அகவாழ்வியல் செயல்பாடுகளில் இடம் பெறுகின்றன.

# வள்ளுவத்தை ஏற்போம் !

புலவர் ந. ஞானசேகரன்

முப்பாலில் இவ்வையம் செப்பம் ஆக்க
முனைந்தவராய் வள்ளுவர்தான் வனைந்த பாக்கள்
இப்பாரில் இருப்போர்க்கும் பிறப்போ ருக்கும்
இல்லறத்தில் நல்லறமே வாய்க்க வைக்கும்
செப்புகின்ற அறவியலோ அறிவை ஊட்டும்
செம்மாந்த குறள்நெறியோ விடிவுண் டாக்கும்
தப்பாமல் அன்பறத்தைத் தான்போதிக்கும்
தடம்பார்த்து நடைபோட வழியும் காட்டும் !

பாயிரத் தோ டியல்கள்தான் பதின்மூன்றாகும்
படைத்துள்ள அறத்துப்பால் பொருட்பா லோடு
தோய்ந்துள்ள கற்புரைத்துக் களவும் சொல்லி
துணைநின்றே இன்பத்துப் பாலும் வெல்லும்
ஆயிரம்முந் நூறும்முப் பத்து மூன்றாய்
அருங்குறளை வெண்பாவில் பதித்த மாண்பு
வாயுரையாம் வாழ்த் தென்றே வையம் போற்ற
வரைந்திட்ட கருத்தெல்லாம் தேனாம் ஊற்றே !

கல்வியும்கள் ளுண்ணாமை கூடாநட்புக்
கண்ணோட்டம் நாணுடைமை சொல்லின் வன்மை
நல்குரவு சான்றாண்மை ஊழின் ஆற்றல்
நற்பெரியார் துணைகோடல் பெருமை சாற்றி
கல்லாமை யின்தீங்கும் கள்ளா மையும்
காலத்தின் பழைமையொடு பகையின் மாட்சி
இல்லாமை வலியறிந்தே விருந்தும் ஓம்ப
இயம்பியுள்ள வள்ளுவத்தை ஏற்போம் வாரீர் !

# யார் டாக்டர் மு.வ.?

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

மு.வ.!

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துலகில் ஈடிலாப் புகழ் ஈட்டிய ஈரெழுத்துப் பெயர் இது.

முத்தான கருத்தால், முதிர்ச்சியான சிந்தனையால் தமிழரின் மூளைவளம் செழித்திட, முனைப்புடன் எழுதுகோலை ஓடவிட்டுத் தித்திக்கும் படைப்புகளை வழங்கிய செம்மலின் சீர்த்திமிகு பெயர் இது.

நான்கு சுவர்களுக்கள் வகுப்பறையில், தான் சொல்லும் நயமிகு கருத்துக்களை நாடே அறிவதற்கு ஓய்வு ஒழிச்சலின்றி வாழ்நாளெல்லாம் எழுதிக் கொண்டே இருந்த எழுத்து வேந்தரின் நற்றமிழ்ப் பெயர் இது.

சொல்லுக்கும் செயலுக்கும் துளியளவும் இடைவெளியின்றி, நல்லொழுக்கச் சால்பால் எல்லோரின் நெஞ்சிலும் சுடர் விட்டு ஒளிரும் நல்லறிஞரின் பெயர் இது.

ஆசிரியர் – மாணவர் என்ற அளவெல்லையைத் தாண்டி, அளப்பரிய அன்பால், பாசமிகு கனிவால் அன்னையாகவே மாறி தன்னிடம் பயின்ற ஒவ்வொரு மாணவரின் ஆழ நெஞ்சிலும் அழியாத ஓவியமாய் நங்கூரமிட்டு அமர்ந்து விட்ட அற்புதப் பெயர் இது.

வாழ்வாங்கு வாழ்ந்து வரலாறு படைத்த வளமார் தமிழினம், தாழ்ந்து தளர்ந்து தன் முகவரியை இழந்ததேன்? எனும் ஆழ்ந்த வினாவைத் தொடுத்து, வீழ்ந்து பட்ட அந்தப் புகழ் இனம் மீண்டும் நிமிர்ந்தெழ வழிவகைகளைத் தொகுத்துக் கூறிய வாய்மையாளரின் வண்ணப் பெயர் இது.

விழியனைய தாய்த் தமிழின் விழுமியத்தை விளக்கிட, மொழி நூலால், மொழியின் கதையால், மொழி வரலாற்றால், எழுத்தின் கதையால், சொல்லின் கதையால், மண்ணக மாந்தரின் மூடிய விழிகளைத் திறந்து, கழிபுகழ்த் தமிழன்னையின் தனிப் பெரும் மாட்சிகளை உரத்துக் கூறிய வீறுமிகு வித்தகரின் எழிலார்ந்த பெயர் இது.

எளிமைக்கும் இனிமைக்கும் ஏற்றதொரு புத்திலக்கணம் வகுத்து, இப்படித்தான் தமிழ்ச் சான்றோர் இருக்க வேண்டும் என்று தன் ஒளிமயமான தும்பைப் பூவனைய தூய வாழ்வால், எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்த ஏற்றமிகு ஏந்தலின் இனிய பெயர் இது.

தம்பிக்கு, தங்கைக்கு, அன்னைக்கு, நண்பர்க்கு, என்று தனிப்பாச உணர்வுடன், தன்னம்பிக்கையும், நன்னெறியும் ஊட்டும் வகையில் மடல்நூல்கள் தீட்டி, தன்னேரிலா வகையில் அறநெறிகளைப் புகட்டித் தெம்பூட்டிய ஆற்றல் மிகு அறிவாசானின் அழகுப் பெயர் இது.

குறளாரின் குரலாகவே மாறி, மறைக் குறளின் மாண்புகளை நிறைவோடும் நிரல் நிரலாகவும் விருந்தாக்கும் வண்ணம் திருக்குறள் தெளிவுரை, திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், குறள்காட்டும் காதலர் போன்ற ஒப்பரிய பனுவல்களால் திருக்குறள் மாண்பை நாட்டோரின் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பதியவைத்த பெருமைக்குரிய பெயர் இது.

இளங்கோ அடிகள், கண்ணகி, மாதவி போன்ற நுண்ணாய்வு நூல்களால் வளமார் சிலப்பதிகாரத்தின் செம்மாந்த பெருமையை வையகத்திற்கு எடுத்துக் கூறி, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே எப்படி ஒரு பண்பாட்டுக் காப்பியம் சேரன் தம்பியால் இம்மண்ணில் செழுமையுடன் மலர்ந்தது என்பதை அழகியலோடு விளக்கிய அருந்தமிழ்த் தோன்றலின் உயரிய பெயர்தான் இது.

தமிழ் இலக்கிய வரலாறு, இலக்கியத்திறன், இலக்கிய ஆராய்ச்சி, இலக்கிய மரபு, இலக்கியக் காட்சிகள், சங்க இலக்கியத்தில் இயற்கை போன்ற சிமிழனைய ஆய்வுப் பெட்டகங்களால், சீரிளமைத் தமிழ் குவித்து வைத்திருக்கும் அளப்பரிய இலக்கியச் செல்வங்களின் ஆழத்தையும் அகலத்தையும் அமுதநடையில் எடுத்துக்கூறி, கற்போரை வியப்பில் நீந்த வைத்த தனிப்பெரும் எழுத்தரசரின் பெருமைமிகு பெயர்தான் இது.

செந்தாமரை எனத் தொடங்கி வாடாமலர் வரை கள்ளோ? காவியமோ? என்றும், கரித்துண்டு என்றும், மலர்விழி என்றும், அல்லி என்றும், அகல்விளக்கு என்றும், கயமை என்றும் பதின்மூன்றுக்கு மேற்பட்ட கற்பனையூற்றும் கருத்தாழமும் மண்டிய அற்புதப் புதினங்களால் தமிழரின் மனவயல்களெல்லாம் செழித்திட அறிவு மழை பொழிந்த செந்தமிழ்ப் பெருமகனின் செம்மாந்த பெயர்தான் இது.

காந்தியண்ணல், கவிஞர் தாகூர், அறிஞர் பெர்னாட்ஷா, திரு.வி.க., பச்சையப்பர் போன்ற கற்கண்டாய் இனிக்கும் வாழ்க்கை வரலாற்று நூல்களால் மாந்தரினம் பெற்றேதீர வேண்டிய உயர் ஒழுக்க நெறிகளையும், ஓங்குயர் பண்பாட்டுப் பாடங்களையும், ஒப்பிலா உழைப்பாற்றலையும் அணி அணியாக எடுத்துக் கூறித் தமிழ் நெஞ்சங்களைப் பண்படுத்திய சிறப்புக்குரிய ஆன்றோரின் பெயர்தான் இது.

நெடுந்தொகை விருந்து, குறுந்தொகை விருந்து, நற்றிணை விருந்து, ஓவச்செய்தி, கொங்குதேர் வாழ்க்கை, முல்லைத் திணை போன்ற அரிய நேரிலா ஆய்வுப் பனுவல்களால், சங்க இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கும் மங்காச் சுடர்க் கருத்துகளை, சுவை விருந்தாய்ப் பரிமாறி, தமிழ் நெஞ்சங்களை இன்பத்தில் மூழ்கடித்த ஒரு பெரும் ஆற்றலாளரின் பெயர்தான் இது.

மொழிப்பற்று, நாட்டுப்பற்று, அறமும் அரசியலும், அரசியல் அலைகள், நல்வாழ்வு, மண்ணின் மதிப்பு போன்ற விழிப்புணர்வூட்டும் படைப்புகளால் தமிழர் குருதியுடன் கலக்க வேண்டிய ஒப்பரிய நல்லுணர்வுகளை எண்ணி எண்ணித் தீட்டிய முதறிஞரின் வண்ணமிகு பெயர்தான் இது.

விடுதலையா? குறட்டை ஒலி, போன்ற சிந்தனை ஒளி சுடர்விடும் சிறுகதைத் தொகுப்புகளன்றி, இந்த மண்ணின் கெடுதலைச் சுட்டிக் காட்டும் வகையில், மனச் சான்று, டாக்டர் அல்லி, மூன்று நாடகங்கள், காதல் எங்கே? போன்ற நாடக இலக்கியங்களால் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கிய வித்தகச் சிந்தனையாளரின் வீறுமிகு பெயர்தான் இது.

மொத்தத்தில் கற்கண்டனைய கட்டுரை நூல்களால், கவின்மிகு புதின நூல்களால், கவர்ந்தீர்க்கும் கடித இலக்கிய நூல்களால், கன்னல் நேர் ஆய்வு நூல்களால், கழிபுகழ் வாழ்வியல் நூல்களால், காலத்தால் அழியாத மொழி நூல்களால், கருத்தைக் கவரும் பயண நூல்களால், கற்பனைச் செறிவுடைய நாடக நூல்களால், காட்டாய் நிற்கும் வாழ்க்கை வரலாற்று நூல்களால், காணும் மழலையர்க்குரிய இலக்கிய நூல்களால், கருத்து மணங்கமழும் மொழி பெயர்ப்பு நூல்களால், கல்வியாற்றலை வெளிப்படுத்தும் ஆங்கில நூல்களால், தமிழ் கூறும் நல்லுலகத்தையே வியப்பில் மூழ்கடித்து, தன் 62 வயது வாழ்க்கையில் எண்பத்தைந்துக்கு மேற்பட்ட கருத்துக் கருவூலங்களை உருவாக்கி, தமிழ் எழுத்துலகில் கொடிகட்டிப் பறந்த தன்னேரிலாப் பேனாப் பேரரசரின் மாற்றிலா மறு பெயர்தான் டாக்டர் மு.வ. !

# இல்லாதது இல்லை...

முனைவர் மலையமான், சென்னை

**எடுப்பு**

இல்லாதது இல்லை இதன்பாலே – இது
இயம்பாதது இல்லை புவி மேலே (இல்லா)

**தொடுப்பு**

எல்லோரும் வாழ வழிகாட்டும் – குறள்
இசையோடு ஓங்கு மொழி ஊட்டும் (இல்லா)

**முடிப்பு**

நல்லோராய் நாடு பெரிதுயர – இதை
நாள்தோறும் தேடின் முறை சொல்லும்;
இல்வாழ்வின் சிறப்பை இனிதுரைக்கும் – உடன்
இயல்பான அறமும் நனிவிரிக்கும் (இல்லா)

கொல்லாமை துறவைத் தொடுத்துரைக்கும் – நலம்
கொண்டோரன் பெருமை எடுத்துரைக்கும்
கல்லாமை ஈன்ற பேரிழிவும் – நிற்கக்
கற்றோரில் தோன்றும் சீர் பாடும்
புல்லாதார் வெல்லும் படைத்திறமும் – வினை
பெரிதாகச் செய்யும் நடைமுறையும்
செல்லாத வலிமைப் பொருள் வளமும் – பிறர்
சொல்லாத எல்லாம் தெரிந்துரைக்கும் (இல்லா)

# வாசகர் வாசகம் (3)

**செந்தமிழ் வாழ்த்து**

வள்ளலார்தம் கவித்துவத்தில் விளைந்த முத்தாய்
வழங்குவித்த அச்சத்தின் மெய்ப்பா டோடு
வள்ளுவரின் நஞ்சமிழ்த ஒப்பீடொன்றும்
வல்தொல்காப் பயிர்சொன்ன மெய்ப்பாடெல்லாம்
உள்ளதிருக் கோவையுடன் செயங்கொண்டார்தான்
உவந்தீந்த கலிங்கத்துப் பரணி காட்டி
வள்ளலாம்அப் பாரிமுதல் நள்ளி கூறி
வரலாறும் வழியும்செந் தமிழை வாழ்த்து!

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்**, திருலோக்கி

## வாசகர் வாசகம் 4

பழங் காலத் துறைமுகங்கள் வணிகம் செய்த
பட்டினங்கள் நகரியத்தைச் சொன்னார் ஸ்ரீதர்
வழங்குமுயர் இலக்கியத்தில் விலங்கின் மாண்பை
வழிந்தோட விட்டிருந்தார் பாண்டுரங்கன்
முழங்கொலியாய் மரகதம்மாள் பெண்கள் நீண்ட
முடிமணக்கும் இயற்கையிலே எனப்புசன்றார்
வழக்காற்றில் குறள் உரையின் நெறிகள் சாற்றி
வளம்கூட்டும் செந்தமிழாம் இதழை வாழ்த்தி !

**பாவலர் அறிவரசன்**, திருலோக்கி

---

## வாசகர் வாசகம் 5

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு ! வணக்கம்.

செந்தமிழ்க் கல்லூரி தமிழ் உயராய்வு மையம் மற்றும் சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இணைந்து நடத்திய, செந்தமிழ் இதழில் வெளிவந்த செவ்வியல் ஆய்வுகள் தேசியக் கருத்தரங்க விழா படச்செய்தியைச் செந்தமிழில் கண்டு உவகை கொண்டோம். செந்நெல் பயிருக்கு உரமும் நீரும் நேர், மொழி வளர்ச்சிக்குக் கருத்தரங்கங்கள் துணை செய்வன, அன்றோ ?

நூல் எண்சீர் விருத்தம், கருத்துச் செறிவு மிக்கது.

ஆறு கட்டுரைகள் குறித்த அறிமுகவுரையை, இதழ்மணம் ஐந்து பத்திகளில் அமைத்துத் தந்த அழகு, கவியரசு கண்ணதாசன் உரைநடை யழகுபோல் ( ஒரு கருத்து, ஒரு பத்தி ) சிறப்புடன் விளங்குகிறது; ஏழாவதாக உள்ள.... வாணிபங்களும் தொடர் கட்டுரை, அடுத்த இதழ் வரவு நோக்க ஆர்வமூட்டியது. கட்டுரைகளின் நிறைவில், சிலவரிகள் இடம் கிடைத்தாலும், திருக்குறள் பாடல்களைத் தரும் உத்தி எளியேனுக்கு மிகவும் பிடித்துள்ளது. பாராட்டுக்கள்.

சீவகசிந்தாமணி, குரவைக் கூத்து, மொழி மரபு ஒப்பாய்வு, நல்லாசிரியர், வருணனை உத்திகள், பாவேந்தர் ஆகிய கருத்துகள் பற்றிய கட்டுரைகளைக் கனிச்சுளைநேர் ஆக்கியளித்த படைப்பாளர்களுக்கும், தங்கக் கிண்ணத்தில் முக்கனிக்கூட்டுபோல் தமிழ்விருந்தளித்த செந்தமிழுக்கும் மனம்நிறை பாராட்டுக்கள். அன்பு ஏற்றுக்கொள்ளுங்கள்.

**புலவர் சி. பாண்டுரங்கன்**, ஆம்பூர்

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57 May 2013 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2013-2014ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.